<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE</u>

<u>(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.</u>

<u>DEPOSITION OF WITNESS</u>

OS.NO.38/2021

P.W.3-BAKKIYALAKSHMI, W/O.V.K.NAGARAJ

DATE:18.11.2022

<u>வா.சா.3 மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

வி.கே.நாகராஜ் என்பவர் என்னுடைய கணவர் என்றால் சரிதான். பிரதிவாதி பாலாஜியின் அப்பா பெயர் வி.கே.நடராஜன் என்றால் சரிதான். என் கணவரும் வி.கே.நடராஜனும் உடன்பிறந்த அண்ணன் தம்பிகள் என்றால் சரிதான். பிரதிவாதியின் அப்பா எப்போது இறந்தார் என்றால் 22.10.1996ல் காலமாகிவிட்டார். அவருக்கு ஈமக்காரியங்கள் செய்தார்களா என்றால் செய்தார்கள். வி.கே.நடராஜனுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் முதல் தாரம் யசோதம்மாளுக்கு 2 பிள்ளைகள் பாஸ்கர் மற்றும் பிரபாகர். இரண்டாவது தாரம் வசந்தம்மாளுக்கு ஒரே மகன் பிரதிவாதி பாலாஜி. பாஸ்கரன், பிரபாகரன், பாலாஜி மூவரும் ஒற்றுமையாக அவரின் தகப்பனாரின் இறுதி காரியங்களை நன்றாக செய்தார்களா என்றால் செய்தார்கள். தாவா சொத்துக்களை மூவரும் அனுபவித்து வந்தார்கள் என்றால் வி.கே.நடராஜன் இறந்தப்பிறகு பாஸ்கரனும் பிரபாகரனும் மட்டும் தான் அனுபவித்து வந்தார்கள். பாலாஜிக்கு தற்போது தான் கொடுத்தார்கள். பாலாஜி எப்போதிலிருந்து சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் 25.01.2022லிருந்து தான் சொத்தை அனுபவித்து வருகிறார். வி.கே.நாகராஜ் என்பவரின் மனைவி என்பதால் எனக்கு குடும்பத்தை பற்றி நன்றாக தெரியும் என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணைக்கான பிரமாண வாக்குமூலத்தில் தாவாவின் 1, 2 அயிட்ட சொத்து மற்றும் லத்தேரி கிராமத்தில் உள்ள 35 செண்ட் நிலம் ஆகியவை என்னுடைய மூத்தார் வி.கே.நடராஜனுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்கண்ட சொத்துகள் எப்போது வி.கே.நடராஜனுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் எனக்கு அவ்வளவாக ஞாபகமில்லை. சொத்துக்கள் எப்படி பிரிக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. 1996ல் வி.கே.நடராஜன் இறந்தப்பிறகு அவரின் பிள்ளைகள் மூவரும் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டு சொத்துக்களை தனித்தனியாக அனுபவித்து வந்தார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. பாஸ்கரனும் பிரபாகரனும் மட்டும் தான் அனுபவித்து வந்தார்கள். சகோதரர்கள் மூவருக்கும் என்ன பேச்சு வார்த்தை என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். லத்தேரியிலுள்ள சொத்துக்களை 2010ஆம் ஆண்டில் பிளாட் போட்டு யார் விற்றார்கள் என்றால் சகோதரர்கள் மூவரும் விற்றார்கள். அதன் மூலம் ரூ. 50 லட்சம் வந்தது என்று எனக்கு எப்படி தெரியவந்தது என்றால் பாலாஜி சொல்லித்தான் எனக்கு தெரியும். அதுபோல் பாலாஜி என்னிடம் எதுவும் சொல்லவில்லை என்றாலும் நான் அவ்வாறு சொல்வது வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பாலாஜி 4 வருடங்களாக என் வீட்டில் இருந்தார். ரூ.15

லட்சம் பணத்தை கொண்டு வந்து என் வீட்டு பீரோவில் அவர் தான் வைத்தார். அவ்வாறு பாலாஜி 4 வருடங்களாக என் வீட்டில் இருந்தார் என்றும் ரூ.15 லட்சம் பணத்தை கொண்டு வந்து என் வீட்டு பீரோவில் அவர் தான் வைத்தார் என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி சாந்தினி என்கிற சாருலதாவை எனக்கு எவ்வளவு காலமாக தெரியும் என்றால் பாலாஜிக்கு 2011ல் திருமணமானதிலிருந்து தெரியும். சாந்தினி என்கிற சாருலதாவிற்கும் குடும்ப பிரச்சனை ஏற்பட்டு 2011ல் பிரிந்துவிட்டார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 2011ல் சாந்தினியை எனக்கு தெரிந்தப்பிறகு மீண்டும் எப்போது பார்த்தீர்கள் என்றால் குழந்தையை எடுத்துக்கொண்டு காட்பாடிக்கு வந்தபோது தெரியும். காட்பாடியில் 2 வருடங்கள் இருந்தார்கள். அப்போது தான் கடைசியாக நான் அவர்களை சந்தித்தேன். அதன்பிறகு சாந்தினியும் பாலாஜியும் தனித்தனியாக இருந்தார்களா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. பிறகு சாந்தினி என்கிற சாருலதாவை சமீபத்தில் எப்போது சந்தித்தேன் என்றால் பிரதிவாதியின் அண்ணன் பாஸ்கர் இறந்தபோது சந்தித்தேன். அப்போது சாந்தினி என்கிற சாருலதா அவருக்கும் அவரின் கணவருக்கும் உள்ள பிரச்சனை குறித்து என்னிடம் சொன்னாரா என்றால் என்னிடம் சொல்லவில்லை. இன்று வரை எனக்கு அதை பற்றி எனக்கு தெரியாது. சொத்து பிரச்சனை குறித்து சாந்தின் என்கிற சாருலதா எப்போது என்னிடம் சொன்னார் என்றால் பாஸ்கரன் இறந்தபோது என்னிடம் சொன்னார். சாந்தினி என்கிற சாருலதா தான் என்னிடம் வழக்கில் சாட்சியம் அளிக்க அழைத்தார் என்றால் சரிதான். சொத்தை விற்று ரூ.50 லட்சம் பெற்றதற்கான எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி பாலாஜிக்கும் சாந்தினி என்கிற சாருலதாவிற்கும் பிரச்சனை ஏற்பட்டு 2011ல் இருந்து அவர்கள் பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்றாலும் நான் பிரதிவாதிக்கு எதிராக சாந்தினி என்கிற சாருலதாவிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை எங்குள்ளது, சர்வே எண்கள் குறித்து எனக்கு தெரியாது என்றால் காட்பாடியில் உள்ள சொத்தின் சர்வே எண்.346, லத்தேரியில் உள்ள சொத்து குறித்து எனக்கு தெரியாது. அதன் ஜெக்பந்திகள் குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதில் காலி பிளாட், வீடு, கடை உள்ளது. எனக்கும் பாலாஜிக்கும் பல வருடங்களாக பேச்சு வார்த்தை இல்லை என்பதால் நான் பிரதிவாதிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டி சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு சாட்சியால் கையொப்பம் செய்யப்பட்டது.

P REVATHY

Digitally signed by P REVATHY
Date: 2022.11.18 17:14:49 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
(விரைவு நீதிமன்றம்),
வேலூர்.